வாக்குமூலம்

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

வழக்கு எண். SC.No. 9/2017

வழக்கு சாட்சி: PW.14

தேதி: 07.03.2023

பெயர்:	**சுப்பையா**	**ஜாதி:**	
தந்தை பெயர் :	**ராமையா**	**தொழில்:**	**விவசாயம்**
கிராமம்:	**வடக்கிப்பட்டி**	**சமயம்:**	**இந்து**
தாலுகா:	**திருமயம்**	**வயது:**	62 /2023

(2, 3எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

முதல் விசாரணை:

நான் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் வடக்கிப்பட்டி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 3வது எதிரியை தெரியும். 23-05-2015ம் தேதி காலை 9 மணியளவில் நானும் எங்கள் ஊர் அடைக்கப்பன் மகன் நடராசன் என்பவரும் இலங்குடிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரகோபாலன் என்பவருடன் அவர் வீட்டில் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது 3வது எதிரி வசந்தி அங்கு வந்தார். சுந்தர கோபாலன் எதற்காக வந்திருக்கிறாய் என்று கேட்டார். சுந்தரகோபாலன் வசந்தியுடன் உனது கணவர் இரயில் தண்டாவாளத்தில் இறந்த விபரம் பற்றி கேட்டார். அதற்கு வசந்தி நான் தான் தனது கணவரை கொலை செய்ததாக கூறியது. அதன்பின்னீடு வசந்தி என்ன பேசியது என்று எனக்கு தெரியாது. நான் வெளியில் சென்றுவிட்டேன். பின்னீடு ஆராங்கல் கிராம நிர்வாக அலுவலரை சுந்தரகோபாலன் வரச் செய்தார். கிராம நிர்வாக அலுவலர் வந்தவுடன் சுந்தரகோபாலன் கிராம நிர்வாக அலுவலர் நான் நடராசன் ஆகியோர் காரைக்குடி இரயில்வே காவல் நிலையம் சென்றோம். என்னைத் தவிர மற்றவர்கள் காவல் நிலையம் உள்ளே சென்றார்கள். நான் வெளியில் நின்றுவிட்டேன். மாலை 3- 4 மணியளவில் நாங்கள் வீட்டிற்கு

வந்துவிட்டோம். 2 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் சம்பவம் பற்றி கூறினேன்.

(சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றும் சுந்தரகோபாலன் வீட்டிற்கு 3வது எதிரி வசந்தி வந்த போது உனது கணவர் எப்படி இறந்தார் என சுந்தரகோபாலன் கேட்டதற்கு வசந்தி தானும் தனது மகள் அன்புக்கரசி தங்கள் கடைக்கு அடிக்கடி வரும் 1வது எதிரி வீரசோழன் மற்றும் அவரது நண்பரான 2வது எதிரி ராஜா என்ற பாரதிராஜா ஆகியோர் சேர்ந்து தனது கணவர் கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்து தண்டாவாளத்தில் போட்டுவிட்டதாக சொன்ன விபரத்தை நான் ஆய்வாளரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் வசந்தி தனது கடைக்கு கேஸ் சிலிண்டர் சப்ளை செய்ய வரும் 1வது எதிரியுடன் தகாத பழக்கம் ஏற்பட்டு பழகி வந்ததாகவும் தனது கணவர் கிருஷ்ணமூர்த்தி ஊரில் இல்லாத நாட்களில் 1வது எதிரி 3வது எதிரி வீட்டில் தங்கிவிட்டு செல்வதாகவும் அதே போல் வசந்தி தனது மகள் அன்புக்கரசி பள்ளிக்கூடம் செல்லும் போது பல ஆண்களுடன் நெருங்கி பழகி, செல்போன்களில் அடிக்கடி பேசி வந்ததை தனது கணவர் கிருஷ்ணமூர்த்தி அன்புக்கரசியை கண்டித்து வந்தார் என்றும் சுந்தரகோபாலன் கூறியதை நான் ஆய்வாளரிடம் சொன்னேனா என்றால் இல்லை. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் 3வது எதிரி வசந்தி 1வது எதிரி வீரசோழனிடம் பேசி பழகுவது வெளியில் தெரிந்தால் அசிங்கமாகிவிடும் என்றும் அதே போல் அன்புக்கரசி பல ஆண்களுடன் பழகுவது வெளியே தெரிந்தால் அசிங்கமாகிவிடும் என்பதால் அன்புக்கரசியும் 3வது எதரி வசந்தியும் சேர்ந்து கிருஷ்ணமூர்த்தியை தீர்த்துகட்டி விட வேண்டும் என முடிவு செய்து 1வது எதிரி வீரசோழனிடம் சொன்னதாகவும் வீரசோழன் 25-

02-2015ம் தேதி இரவு லாரியில் சிலிண்டர் ஏற்றிக் கொண்டு வருவதாகவும் வசந்தியின் 2வது, 3வது மகள்கள் தூங்கிய பின்னீடும் கிருஷ்ணமூர்த்தி தூங்கிய பின்னீடும் தனக்கு மிஸ்டுகால் கொடுத்தால் வீரசோழனும் அவரது நண்பர் 2வது எதிரி ராஜா என்ற பாரதிராஜாவும் வந்து கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்யலாம் என்று சொன்னதாகவும் நான் ஆய்வாளரிடம் சொன்னேனா என்றால் வசந்தி அவ்வாறு கூறியதாக சுந்தரகோபாலன் என்னிடம் கூறினார் என கூறினேன். வசந்தி இரவு 11.30 மணியளவில் 1வது எதிரிக்கு மிஸ்டு கால் கொடுத்த பின்னீடு 1, 2 எதிரிகள் வீட்டிற்குள் வந்து இரும்பு கம்பியை பயன்படுத்தி கிருஷ்ணமூர்த்தியை அடித்து தலையனையால் தலையை அமுக்கி கொலை செய்யும் போது அவர் சத்தத்தை கேட்டு வசந்தியின் 2வது மற்றும் 3வது மகள்கள் வந்ததாகவும் அவர்களை இந்த விசயத்தை வெளியில் சொன்னால் உங்களையும் இதே மாறி கொன்றுவிடுவோம் என எதிரிகள் மிரட்டியதாகவும் கிருஷ்ணமூர்த்தி இறந்த பின்னீடு கிருஷ்ணமூர்த்தியை ஒரு பெஞ்சில் படுக்க வைத்து இரயில்வே தண்டாவாளத்தில் கொண்டு போய் 1, 2 எதிரிகள் போட்டுவிட்டதாகவும் நான் காவல் ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா என்றால் வசந்தி சுந்தரகோபாலனிடம் சொல்லும் போது நான் அங்கு இல்லை என்றும் அது குறித்து சுந்தரகோபாலன் தன்னிடம் சொன்னால் என்னும் நான் ஆய்வாளரிடம் சொன்னேன். அதன் பின்னீடு இரயில்வே தண்டாளத்தில் ஒரு ஆண் பிணம் கிடப்பதாக தகவல் அறிந்து வசந்தி அங்கு சென்று பார்த்து தனது கணவர் மனநிலை சரியில்லாமல் இரயில்வே தண்டவாளத்தில் இறந்துவிட்டார் என்று அழுததாகவும் அங்கு வந்த வசந்தியின் மகள்கள் அபிராமி, பவித்ரா இருவரையும் உண்மை சம்பவத்தை வெளியில் சொல்லக்கூடாது என்று மிரட்டியதாகவும் தனது கணவர் இரயிலில் அடிப்பட்டு இறந்து விட்டார் என காரைக்குடி இருப்புப்பாதை காவல்நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்தார் என்றும் பின்னர் விசயம் வெளியே தெரிய வரவே தன்னை போலீசார் கைது செய்து விடுவார் என பயந்து கொண்டு தற்போது உண்மையை சுந்தரகோபாலனிடம் வசந்தி

சொன்னதாக நான் காவல் ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. 3வது எதிரி வசந்தி எனது உறவினர் மற்றும் எனது ஊர்காரர் ஆவார். 3வது எதிரி எனது உறவினர் என்பதால் சில விசயங்களை மட்டும் கூறிவிட்டு வசந்தியை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

எனக்கு ஆஜர் 3வது எதிரியான வசந்தியை மட்டும் தெரியும். 1, 2 எதிரிகளை தெரியாது. பார்த்தது இல்லை. நான் சுந்தரகோபாலன் வீட்டிற்கு வெளியில் இருந்ததால் வீட்டிற்குள் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்தில் வெளியில் இருந்ததால் உள்ளே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் சுந்தரகோபாலன் வீட்டிற்கு காலை 9 முதல் 9.30 மணிக்கு சென்றேன். நான் சுந்தரகோபாலன் வீட்டில் அரை மணிநேரத்திலிருந்து முக்கால் மணிநேரம் வரை இருந்தேன். சுந்தரகோபாலன் வீட்டில் இருந்து நேரடியாக நான் காவல் நிலையம் சென்றுவிட்டேன். நமணசமுத்திரம் கிராம நிர்வாக அலுவலர் காலை 10 மணிக்கு அலுவலகத்திற்கு வந்தார். மேற்படி கிராம நிர்வாக அலுவலருக்கு சுந்தரகோபாலன் எத்தனை மணிக்கு தகவல் சொன்னார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சுந்தரகோபலன் வீட்டிற்கு கிராம நிர்வாக அலுவலர் 11 மணியிலிருந்து 11.30 மணிக்குள் வந்தார். நான் சுந்தரகோபாலன், நடராசன், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வாகன ஓட்டுநர் ஆகியோர்கள் மட்டும் சுந்தரகோபாலன் சொந்தமான வாகனத்தில் சென்றோம். காவல் நிலையத்திற்கு 12.30 மணியிலிருந்து 1 மணிக்குள் சென்றோம். எங்கள் ஊரில் இருந்து காரைக்குடி இரயில்வே இருப்புப் பாதை காவல் நிலையம் எவ்வளவு துாரத்தில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் வெளியே நான் சுமார் 1 மணி நேரம் வரை காத்திருந்தேன். நான் சொன்ன மாறி, சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சுந்தரகோபாலன் வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி வசந்தி சுந்தரகோபாலனிடம் வந்து எந்த வாக்குமூலமும்

கொடுக்கவில்லை என்றாலும் வாக்குமூலம் கொடுத்ததாக சுந்தரகோபாலன் என்னிடம் சொன்னதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றாலும் காவல் நிலையத்திற்கு சென்றதாக போலீசார் கேட்டு கொண்டதற்இணங்க பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக போலீசார் 2 நாட்கள் கழித்து என்னிடம் விசாரித்தார்கள்.

1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.

வாக்குமூலம்

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

வழக்கு எண். SC.No.9/2017

வழக்கு சாட்சி: PW.15

தேதி: 07.03.2023

பெயர்:	**சரவணன்**	**ஜாதி:**	
தந்தை பெயர் :	**அடைக்கலம்**	**தொழில்:**	**தமிழக மின்சார வாரியத்தில் பணி**
கிராமம்:	**முனைசந்தை**	**சமயம்:**	**இந்து**
தாலுகா:	**திருமயம்**	**வயது:**	**43/2023**

(2, 3எதிரிகள் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

முதல் விசாரணை:

நான் தற்சமயம் புதுக்கோட்டையில் குடியிருந்து ஆலங்குடியில் தமிழக மின்சார வாரியத்தில் பணிபுரிந்து வருகிறேன். சம்பவம் சமயத்தில் நான் பொன்னமராவதியில் பணிபுரிந்து வந்தேன். ஆஜர் 3 வது எதிரி வசந்தியை மட்டும் தெரியும். நான் இறந்து போன கிருஷ்ணமூர்த்தி வீட்டில் தான் குடியிருந்து வந்தேன். 3வது எதிரி வசந்தி கிருஷ்ணமூர்த்தியின் மனைவி ஆவார். நான் ரூ.1300 மாத வாடகைக்கு 8 மாதமாக குடியிருந்து வந்தேன். 25-02-2015 அன்று நான் காலையில் வேலைக்கு சென்றுவிட்டு இரவு 9 முதல் 10 மணியளவில் வீட்டிற்கு வந்தேன். வழக்கம் போல் நான் குளித்துவிட்டு சாப்பிட்டேன். அப்பொழுது சத்தம் கேட்டது. நான் அது குறித்து கவனித்து கொள்ளவில்லை. நான் எப்பொழுதும் போல் தூங்கி விட்டு மறுநாள் வழக்கம் போல் வேலைக்கு சென்றுவிட்டேன். 9.30 மணியளவில் எனக்கு வீட்டில் இருந்து போன் வந்தது. நான் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளர் இரயில் பாதையில் அடிப்பட்டு இறந்து கிடப்பதாக தகவல் கிடைத்தது. நான் தகவல் கிடைத்தவுடன் இரயில்வே பாதையில் வந்து பார்த்தேன். இரயில்வே காவலர்கள் வந்திருந்தார்கள். பிரேத பரிசோதனைக்காக திருமயம் அரசு மருத்துவமனைக்கு கிருஷ்ணமூர்த்தியின் உடலை கொண்டு போனார்கள். பிரேத பரிசோதனை முடிந்த பின்னீடு கிருஷ்ணமூர்த்தி உடலை அவரது பெற்றோர்கள் பெற்றுக் கொண்டு அவரது ஊருக்கு கொண்டு போனார்கள். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன் பின்னீடு 2 மாதங்கள் கழித்து கிருஷ்ணமூர்த்தியின் மரணம் கொலை என்றும் அவரை கொலை செய்து இரயில் தண்டவாளத்தில் போட்டுவிட்டார்கள்

என்றும் நான் கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் நான் நடந்த விபரங்களை கூறினேன்.

2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் 3வது எதிரி வீட்டில் குடியிருக்கும் போது நானும் எனது மனைவி மட்டும் தான் இருந்தோம். சம்பவம் சமயத்தில் நான் பொன்னமராவதியில் வேலை செய்தேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் பொன்னமராவதியில் நான் பணிபுரியும் இடத்திற்கும் சுமார் 45 கி.மீ இருக்கும் . நான் வேலைக்கு இருசக்கர வானத்தில் தான் சென்றுவருவேன். கிருஷ்ண மூர்த்தி இறந்த தகவல் எனக்கு காலை 9.30 மணியளவில் எனக்கு கிடைத்தது. 11 மணியளவில் நான் பிரேதம் கிடந்த இருப்புப் பாதைக்கு வந்தேன். நான் வரும் போது அந்த இடத்தில் சுமார் 100 நபர்கள் இருந்திருப்பார்கள். போலீசார் 4, 5 நபர்கள் இருந்தார்கள். பிரேதத்தை மதியம் எடுத்து சென்றார்கள். அந்த நேரத்தை நான் கவனிக்கவில்லை. 1, 2 எதிரிகளை நான் பார்த்ததில்லை. நான் குடியிருந்த வீட்டிற்கு எதிரே நமணசமுத்திரம் காவல் நிலையம் உள்ளது என்று சொன்னால் சரிதான். எங்கள் வீடு மற்றும் 3 வது எதிரி வீட்டில் சத்தம் கேட்டால் காவல் நிலையத்திற்கு கேட்குமா என்றால் கேட்கும். கிருஷ்ணமூர்த்தி இறந்த பின்னீடு 10 நாட்கள் வரை அவர் வீட்டில் குடியிருந்தேன். 3வது எதிரியின் மகள்கள் கிருஷ்ண மூர்த்தி இறந்த பின்னீடும் பள்ளிகூடம் சென்று வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். கிருஷ்ணமூர்த்திக்கும் 3வது எதிரிக்கும் பிரச்சனைகள் ஏற்பட்டு நான் குடியிருந்த காலத்தில் காவல் நிலையம் சென்றார்களா என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் வீட்டில் நடக்கும் விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் விசாரித்தார்களா என்றால் போனில் விசாரித்தார்கள். பேசிய நபர் போலீசாரா என்று எனக்கு தெரியாது. நான் வேலைக்கு சென்றுவிட்டு இரவு 9.30 மணிக்கு தூங்கிவிட்டு காலை 6 மணிக்கு எழுந்து பணிக்கு சென்றுவிடுவேன். நான் முதல் விசாரணையில் சத்தம் கேட்டதாக சொல்யுள்ளேன். அந்த சத்தம் எங்கிருந்து கேட்டது என்று எனக்கு தெரியாது. அவ்வாறு சத்தம் கேட்டகவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

1 வது எதிரி தரப்பில் 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

சாட்சி சொல்வதற்கு அழைத்த போது தான் இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் எனக்கு தகவல் சொன்னார்கள். அதற்கு முன்பு எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது.

3எதிரி வசந்திக்கு எத்தனை வீடுகள் இருக்கிறது என்பது எனக்கு தெரியாது. 3எதிரி வசந்தி வீட்டில் இருந்து கிழக்கு பக்கம் 200 மீட்டர் தள்ளி 4 வீடுகள் அமைந்துள்ளது. அதில் கடைசி வீட்டில் நான் குடியிருந்தேன். இறந்த கிருஷ்ணமூர்த்தி ஏதேனும் பேசுவாரா என்றால் ஏதேனும் பொருட்கள் வாங்குவதாக இருந்தால் பேசுவார். இறந்து போன கிருஷ்ணமூர்த்தி அவர் வீட்டிற்கு எதிரே உள்ள காவல் நிலையத்திற்கு சென்று பேசுவாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இறந்து போன கிருஷ்ணமூர்த்தி அந்த நான்கு வீட்டில் ஒரு வீட்டில் தங்குவார். 3வது எதிரி வசந்தி தனி வீட்டில் குடியிருந்தார் என்றால் சரிதான். வசந்தி வீட்டில் தான் அவரது மகள்கள் குடியிருப்பார்களா என்றால் அப்பா வீட்டிலும் இருப்பார்கள். வசந்தி வீட்டிலும் இருப்பார்கள். வீட்டிற்கு எதிரே உள்ள காவல் நிலையத்தில் இரவில் விளக்குகள் எரியுமா என்றால் எரியும் இரவில் காவலர்கள் இருப்பார்கள். நான் வீட்டு வாடகையை கிருஷ்ணமூர்த்தியிடம் கொடுப்பேன் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை: முடிவுற்றது.